Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 22.03.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்

தேதி : 22.03.2026 – ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

யோகா மற்றும் ஆயுர்வேதம் போன்ற நாட்டின் பாரம்பரிய மருத்துவ முறைகள் உலக அங்கீகாரம் பெற்றுள்ளன என்று குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்திய அரசியலில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் தலைவராக மிக நீண்ட காலம் பணியாற்றியவர் என்ற வரலாற்று மைல்கல்லை எட்டியுள்ளார்.

புதுச்சேரி சட்டமன்ற தேர்தல் 2026-க்கான வேட்புமனு தாக்கல் செய்ய நாளை கடைசி நாள்.

இந்திய விவசாயிகள் எரிபொருள் மற்றும் ஆற்றலை உற்பத்தி செய்யும் திறனைப் பெற்றுள்ளனர் என்று மத்திய அமைச்சர் திரு. நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.

*சி.பி.ராதாகிருஷ்ணன் (12 )*

யோகா மற்றும் ஆயுர்வேதம் போன்ற நாட்டின் பாரம்பரிய மருத்துவ முறைகள் உலக அங்கீகாரம் பெற்றுள்ளன என்றும், அவை உடல் மற்றும் மனநலனை மேம்படுத்துகின்றன என்றும் குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். அவர் இன்று மகாராஷ்டிரா மாநிலம், புனே அருகிலுள்ள இயற்கை மருத்துவ ஆசிரமத்தின் 81ஆவது ஆண்டுவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார். மக்கள் இயற்கையான வாழ்க்கை முறையை கடைபிடிக்க இயற்கையோடு நெருக்கமாக வாழவேண்டும் என்று வலியுறுத்திய அவர், மாறிவரும் உணவு பழக்க வழக்கங்கள் மற்றும் அலோபதி மருந்துகளை அதிகமாக சார்ந்திருப்பதால் ஏற்படும் பாதகமான விளைவுகள் பற்றி எடுத்துரைத்தார். நிகழ்ச்சியின்போது டாக்டர் N.G. Hegde எழுதிய மகிழ்ச்சியின் ரகசியங்கள் என்ற புத்தகத்தையும் திரு. ராதாகிருஷ்ணன் வெளியிட்டார்.

*மோடி -1 (04)*

நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசாங்கத்தின் மிக நீண்ட காலம் பதவி வகிக்கும் தலைவர் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க பெருமையை

பிரதமர் திரு. நரேந்திர மோடி பெற்றுள்ளார். இது குறித்த கூடுதல் தகவல்கள்.

… வாய்ஸ்…

*மோடி வாய்ஸ் - (17)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, முன்னர் வகித்த குஜராத் முதலமைச்சர் மற்றும் தற்போதைய பிரதமர் ஆகிய பதவிக் காலங்களைச் சேர்த்து 8 ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தியொரு நாட்களை நிறைவு செய்துள்ளார். இதன் மூலம் தலைமைப் பொறுப்பில் அவர் தனது 25ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார். திரு. மோடி, தனது அரசியல் பயணத்தில், குஜராத் மாநில முதலமைச்சராக நீண்ட காலம் பதவி வகித்தவர் என்பதும், முதலமைச்சராக மிக நீண்ட முன்அனுபவம் கொண்ட இந்திய பிரதமர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும், சுதந்திர இந்தியாவில் பிறந்த இவர், தொடர்ச்சியாக மூன்று மக்களவை தேர்தல்களில் வெற்றி பெற்றவர் என்ற சாதனையையும் படைத்துள்ளார்.

இந்த ஆண்டு, பிரதமர் திரு. நரேந்திர மோடி டிஜிட்டல் தளத்தில் பல குறிப்பிடத்தக்க சாதனைகளை எட்டியுள்ளார். சமூக ஊடகங்களில் 10 கோடிக்கும் அதிகமானோர் பிரதமரை பின்தொடர்வதன் மூலம் பல முக்கிய சர்வதேச அரசியல் பிரமுகர்களை விட இவர் முன்னிலையில் உள்ளார்.

சிக்கிம் முதலமைச்சராக 8,930 நாட்கள் பதவி வகித்த திரு. Pawan Kumar Chamling-ன் சாதனையை பிரதமர் திரு. நரேந்திர மோடி விஞ்சியுள்ளது குறிப்பிடத்தக்கது.

*மோடி ராஜ்நாத் - (08)*

இந்திய அரசாங்கத்தில் மிக நீண்ட கால தலைவராக பணியாற்றி வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார். பிரதமர் திரு. மோடி, தேசம் மற்றும் மக்களுக்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர் என்றும், குஜராத் மாநில முதலமைச்சராக இருந்த போது அவரது இடைவிடாத சேவையும், அர்ப்பணிப்புமே அவரை இந்த உயரத்திற்கு கொண்டு சென்றுள்ளது என்றும் திரு. ராஜ்நாத் சிங் சமூக ஊடகப்பதிவில் தெரிவித்துள்ளார்.

*தேர்தல் ஆணையம் (13)*

சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்தில் வாக்குப்பதிவு நடைபெறும் நாளன்று ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் உறுதி செய்யப்பட்ட குறைந்தபட்ச வசதிகளை வாக்காளர்களுக்கு தலைமை தேர்தல் அதிகாரிகள் ஏற்படுத்தி தர வேண்டும்

என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. வாக்குச்சாவடிகளில் நிழலுடன் கூடிய காத்திருப்பு பகுதி, குடிநீர், சுத்தமான கழிவறை, மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கான சாய்வு தள வசதி, முறையான வழிகாட்டி பலகைகள் உள்ளிட்ட வசதிகள் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், வாக்குச்சாவடிகளில் வேட்பாளர்களின் பட்டியல், வாக்காளர்கள் செய்யவேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை பற்றிய தகவல்கள், அங்கீகரிக்கப்பட்ட அடையாள ஆவணங்களின் பட்டியல் குறித்த தகவல்கள் வைக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

*தேர்தல் புதுச்சேரி - 1(16)*

2026-புதுச்சேரி சட்டமன்ற தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளை 23ஆம் தேதி கடைசி நாள் ஆகும். வேட்பு மனுக்களை திரும்பப் பெற மார்ச் 26ஆம் தேதி கடைசி நாள் ஆகும். அடுத்த மாதம் 9ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் மாதிரி நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளன. தேர்தல் ஆணையத்தின் விதிமுறைப்படி இரவு 10 மணிக்கு மேல் மது விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது. விதிகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று

தெரிவிக்கப்பட்டுள்ளது. விதிமீறல்கள் குறித்து பொதுமக்கள் உடனடியாக மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

புதுச்சேரி தேசிய ஜனநாயக கூட்டணியில் அஇஅதிமுக போட்டியிடும் 2 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். உப்பளம் தொகுதி வேட்பாளராக கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. அன்பழகனும், உருளையன்பேட்டை தொகுதி வேட்பாளராக அதிமுக துணைச் செயலாளர் திரு. காந்தியும் நாளை மனுதாக்கல் செய்யவுள்ளனர்.

*தேர்தல் புதுச்சேரி - 2(10)*

புதுச்சேரி முன்னாள் அமைச்சர் திரு. சாய் ஜெ. சரவணன் குமார் பாஜகவின் அடிப்படை உறுப்பினர் பதவி மற்றும் அனைத்து நிலை பொறுப்பிலிருந்தும், விலகுவதாக பிரதமர் மற்றும் பாஜக தேசியத் தலைவருக்கு கடிதம் எழுதியுள்ளார். மேலும், இதுவரை தம்முடன் பணியாற்றி அனைத்து தலைவர்கள், தொண்டர்கள், நண்பர்களுக்கும்

தமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாகவும், அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

காரைக்கால் தெற்கு தொகுதிக்கு பா.ஜ.க. வேட்பாளராக மாநில தலைமைச் செய்தி தொடர்பாளர் திரு. அருள் முருகன் அறிவிக்கப்பட்டுள்ளார்.

*நிதின்கட்கரி - (11)*

இந்திய விவசாயிகள் எரிபொருள் மற்றும் ஆற்றலை உற்பத்தி செய்யும் திறனைப் பெற்றுள்ளனர் என்று மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. நிதின்கட்கரி தெரிவித்தார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார். மத்திய அரசு, இந்தியன் ஆயில் நிறுவனத்துடன் இணைந்து பானிபட்டில், வைக்கோலில் இருந்து 1 லட்சம் லிட்டர் எத்தனால், 150 டன் பயோ-பிட்டுமென் மற்றும் சுமார் 78 ஆயிரம் டன் விமான எரிபொருள் ஆகியவற்றை உற்பத்தி செய்து வருவதாக திரு.நிதின்கட்கரி தெரிவித்தார். மேலும், உயிரி தொழில்நுட்பத்தின் பயன்பாடு, நாட்டில் டீசல் இறக்குமதியை முடிவுக்கு கொண்டுவரும் என்றும் அமைச்சர் கூறினார்.

*மனோகர்லால் (17)*

மின்சாரம் ஒரு அடிப்படைத் தேவை என்றும் சாமானிய மக்கள் மலிவு விலையில் மின்சாரம் பெறுவதை உறுதி செய்வது அவசியம் என்றும், மத்திய மின்சாரத் துறை அமைச்சர் திரு. மனோகர்லால் கூறியுள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற பாரத் மின்சார உச்சி மாநாடு 2026-ன் நிறைவு விழாவில் உரையாற்றிய அவர், சௌபாக்யா யோஜனா மற்றும் பிரதமர் சூர்ய கர் போன்ற திட்டங்களின் மூலம் எல்லைப்பகுதிகள் உட்பட நாடு முழுவதும் உள்ள தொலைதூர இடங்களுக்கு மின்சாரம் சென்றடைந்துள்ளதாக தெரிவித்தார். எரிசக்தி துறையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் ஏற்படும் முக்கிய பிரச்சனைகள் குறித்து விவாதிக்க இந்த உச்சி மாநாடு ஒரு முக்கிய தளமாக விளங்குகிறது என்றும், இம்மாநாட்டில் கொள்கை வகுப்பாளர்கள், தொழில்துறை தலைவர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் புதுமைப் படைப்பாளர்கள் உள்ளிட்டோர் ஒன்றிணைந்து எரிசக்தியின் எதிர்காலம் குறித்து விவாதித்தனர் என்றும் அமைச்சர் கூறினார். அடுத்த மாநாடு 2028ஆம்ஆண்டு குஜராத் மாநிலம், காந்தி நகரில் நடைபெறும் என்று தெரிவித்த திரு. மனோகர்லால், புத்தாக்கத்தை ஊக்குவிப்பதிலும், பொருளாதாரத்தை வலுப்படுத்துவதிலும், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் முக்கியப்பங்கு வகிப்பதாக குறிப்பிட்டார்.

*பீகார் உதயம் (15)*

பீகார் மாநில உதய தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்தியாவின் பாரம்பரிய பெருமையை நிலைநிறுத்தி வரும் பீகார் மாநிலம் கடின உழைப்பாளிகளைக் கொண்டது என்றும், வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை அடைவதில் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அவர் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் செழுமையான கலாச்சாரம், மரபுகள் மற்றும் தனித்துவமான கலைகளில் பீகார் மாநிலம் பெயர்பெற்று விளங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

பாட்னாவிலுள்ள காந்தி மைதானத்தில் மாநில அளவிலான பீகார் திவஸ் கொண்டாட்டங்கள் இன்று தொடங்கி 3 நாட்களுக்கு நடைபெறவுள்ளன. நாளை மறுநாள் நடைபெறும் நிறைவு விழாவில் அம்மாநில ஆளுநர் Lieutenant General Syed Ata Hasnain உரையாற்றவுள்ளார்.

*உலக நீர் தினம் -1(03 )*

ஒவ்வொரு சொட்டு நீரை சேமிக்கவும், அதனை பொறுப்புடன் பயன்படுத்தவும் மக்கள் உறுதிமொழி ஏற்க வேண்டும் பிரதமர் திரு.நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இது குறித்த கூடுதல் தகவல்கள்.

...வாய்ஸ்...

*உலக நீர் தினம் -2 வாய்ஸ் - (17)*

... வாய்ஸ்...

உலக தண்ணீர் தினம் இன்று கடைபிடிக்கப்படுதை முன்னிட்டு பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், நீர் வாழ்வின் ஆதாரமாகவும், பூமியின் எதிர்காலத்தை வடிவமைப்பதாகவும் உள்ளது என்று கூறியுள்ளார். நீர் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் நபர்களையும், நிறுவனங்களையும் பிரதமர் வெகுவாகப் பாராட்டியுள்ளார். இந்நாளை ஒட்டி மத்திய ஜல்சக்தி அமைச்சகம், நாளை புதுடெல்லியில் உலக நீர் தின மாநாடு-2026-ஐ நடத்தவுள்ளது. மத்திய ஜல்சக்தி அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் இம்மாநாட்டைத் தொடக்கி வைத்து அரசு மற்றும் தொழில் துறையினரின் முக்கியப் பிரதிநிதிகளுடன் மாநாட்டின் தொடக்க அமர்வில் பங்கேற்கிறார். நீடித்த நீர் மேலாண்மைக்கான வழிகள் குறித்து ஆராய்வதற்கும், புதுமை மற்றும்

ஒத்துழைப்புக்கான ஒரு தளமாக இம்மாநாடு அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. நீருக்கான தொழில் என்ற கருப்பொருளுடன் தொடங்கப்படவுள்ள இம்மாநாட்டில் தொழில்துறை தலைவர்கள், கல்வியாளர்கள், ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் இளம் கண்டுபிடிப்பாளர்கள் கலந்து கொண்டு பல்வேறு கட்டமாக ஆலோசனை மேற்கொள்ள உள்ளனர்.

*உலக நீர் தினம் -3 வாய்ஸ் - (02 )*

இந்நிகழ்வில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 700க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

*ஸ்குவாஷ் (07)*

இந்தியன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் அனாகத் சிங், எகிப்தின் Hana Moataz-ஐ எதிர்கொள்கிறார். இப்போட்டி மும்பையில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

இன்றிரவு 7.45 மணிக்கு மும்பையில் நடைபெறும், ஆடவர் ஒற்றையர் பிரிவு ஸ்குவாஷ் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் அபய் சிங், வீர் சோத்ராணியை எதிர்கொள்கிறார்.

*ஈரான் (12)*

மேற்கு ஆசியாவின் பல நாடுகளில் ஈரான் நடத்தி வரும் தாக்குதல்களை ஜி-7 நாடுகள் வன்மையாக கண்டித்துள்ளன. கனடா, பிரான்ஸ் ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் பிரதிநிதிகள் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் மேற்காசிய நாடுகள் மட்டுமல்லாமல் உலகளாவிய பாதுகாப்பிற்கு இந்த தாக்குதல்கள் அச்சுறுத்தலாக உள்ளன என்றும், எனவே ஈரான் தனது ராணுவ நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளன. ஈரான் தனது கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை திட்டங்களைக் கைவிட வேண்டும் என்றும், அணு ஆயுதங்களை உருவாக்க ஈரானை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும், அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

*கச்சா எண்ணெய் (10)*

மேற்காசியாவில் நிலவும் போர் பதற்றம் காரணமாக ரஷ்யாவிலிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதற்கு அமெரிக்கா அனுமதி அளித்ததை அடுத்து தற்போது ரஷ்யாவிலிருந்து கச்சா எண்ணெய் அக்குவா டைட்டன் என்ற கப்பல் மூலம் கர்நாடக மாநிலம் மங்களூருக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும், அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்திலிருந்து பெட்ரோலிய எரிவாயு ஏற்றி வந்த சரக்கு கப்பலும் மங்களூர் துறைமுகம் வந்துள்ளது. முன்னதாக நந்தாதேவி என்ற எல்பிஜி டேங்கர் கப்பல் வாடினார் துறைமுகத்தை வந்தடைந்தது. இதேபோல முந்த்ரா துறைமுகத்தில் ஷிவாலிக் கப்பல் பெட்ரோலிய எரிவாயுவை ஏற்றி வந்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

யோகா மற்றும் ஆயுர்வேதம் போன்ற நாட்டின் பாரம்பரிய மருத்துவ முறைகள் உலக அங்கீகாரம் பெற்றுள்ளன என்று குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்திய அரசியலில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் தலைவராக மிக நீண்ட காலம் பணியாற்றியவர் என்ற வரலாற்று மைல்கல்லை எட்டியுள்ளார்.

புதுச்சேரி சட்டமன்ற தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்ய நாளை கடைசி நாள்.

இந்திய விவசாயிகள் எரிபொருள் மற்றும் ஆற்றலை உற்பத்தி செய்யும் திறனைப் பெற்றுள்ளனர் என்று மத்திய அமைச்சர் திரு. நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது SS/RK/VM**